Dhinathdhalam@gmail.com www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 001 | புதன்கிழமை Wednesday | 01.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# திருவாரூரில் முதலமைச்சர் ஸ்டாலின் வாகனத்தை சோதனையிட்ட பறக்கும் படையினர்



திருவாரூர் தேர்தல் பரப்புரைக்காக திருவாரூர் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் வாகனத்தை பறக்கும் படை அதிகாரிகள் சோதனையிட்டனர்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. முதலமைச்சரும், திமுக தலைவருமான ஸ்டாலின் சென்னை கொளத்தூர் தொகுதியில் போட்டியிடவுள்ள நிலையில்,நேற்று அங்கு சென்ற அவர், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அதில் தனது சொத்து மதிப்பு ரூ.7.64 கோடி என அவர் குறிப்பிட்டு உள்ளார்.

மேலும், தனது கையிருப்பு ரொக்கமாக ரூ.10 ஆயிரம் இருப்பதாகவும், மனைவி துர்கா ஸ்டாலினிடம் ரூ.40 ஆயிரம் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, திமுகமற்றும்கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் ஸ்டாலின் இன்று முதல் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளார். தனது சொந்த ஊரான திருவாரூரில் இருந்து தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

இதற்காக, சென்னையில் இருந்து விமானம் மூலமாக முதலமைச்சர் திருச்சி சென்றார். பின்னர் அங்கிருந்து பிரச்சார வேன் மூலமாக திருவாரூர் நோக்கி புறப்பட்டார்.

இந்நிலையில், தஞ்சாவூர் அருகே சாலியமங்கலத்தில் அவரது பிரச்சார வேன் சென்றபோது, தேர்தல் பறக்கும் படையினர் அதை தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் அமர்ந்திருந்த முன்பக்க கதவை திறந்த அதிகாரிகள், அங்கிருந்த பொருட்களை சோதனை செய்தனர். பின்னர், வேனின் பின்பக்க கதவையும் திறந்து அவர்கள் சோதனை நடத்தினர். இதில், வேனில் எந்த பணமோ, பரிசுப்பொருட்களோ இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பிறகு, அவரது வாகனத்தை அனுமதித்தனர். இதையடுத்து, முதலமைச்சர் திருவாரூர் சென்றடைந்தார்.

திருவாரூர் தெற்குரத வீதியில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் ஸ்டாலின் பங்கேற்கிறார். திருவாரூர் தொகுதி திமுக வேட்பாளர் பூண்டி கலைவாணன், திருத்துறைப்பூண்டி தொகுதி சிபிஐ வேட்பாளர் மாரிமுத்து, நன்னிலம் தொகுதி எஸ்டிபிஐ வேட்பாளர் முகமது முபாரக், மன்னார்க்குடி தொகுதி திமுக வேட்பாளர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோரை ஆதரித்து முதலமைச்சர் வாக்கு சேகரிக்கிறார்.

முன்னதாக,திருவாரூர் அருகே முன்னாள் அமைச்சர் பழநிமாணிக்கம்,திமுக வேட்பாளர்கள் சந்திரசேகரன் ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம்பூபதி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# “கேரளாவில் சிபிஎம் வெற்றி பெற பாஜக விரும்புகிறது” ராகுல் காந்தி பேச்சு




திருவனந்தபுரம்: கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் சிபிஎம் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி வெற்றி பெற வேண்டும் என்று பாஜக விரும்புவதாக ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

கேரள சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு கன்னூரில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, "பாஜகவுக்கும் சிபிஎம்-க்கும் இடையே மறைமுக கூட்டணி இருக்கிறது. இவ்விரு சக்திகளும் இணைந்துதான் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியை எதிர்க்கிறார்கள்.

பிரதமர் எங்கு சென்றாலும், கோயில்கள், மதம், கடவுள்கள் குறித்துப் பேசுகிறார். ஆனால், கேரளாவுக்கு வரும்போது சபரிமலை கோயில் விவகாரத்தை அவர்எழுப்புவதில்லை. சிபிஎம் தலைவர்கள் சபரிமலை கோயிலில் இருந்துதங்கத்தைதிருடியுள்ளார்கள். ஆனால், அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்து மதத்தின் பாதுகாவலர் என்று சொல்லிக் கொள்ளும் அவர், கேரளாவுக்கு வந்துவிட்டு சபரிமலை குறித்து எதுவும் பேசாமல் செல்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி, கேரள முதல்வரை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். கேரள முதல்வர் மீதான வழக்குகளில் மோடி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது முதல்வருக்கே தெரியும். காங்கிரஸ் கட்சி, மோடியை தாக்கிப் பேசுவதை நீங்கள் கேட்கமுடியும்.ஆனால், கேரள முதல்வர், பிரதமரை தாக்கிப் பேசுவதையோ,அல்லது பிரதமர், கேரள முதல்வரை தாக்கிப் பேசுவதையோ நீங்கள் ஒருபோதும் கேட்க முடியாது" என தெரிவித்தார்.

தொடர்ந்து கோழிக்கோட்டில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, "நாம் ஒரு நிலையற்ற, ஆபத்தான காலகட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். எரிபொருள் விலைகள் உயரப்போகின்றன. பணவீக்கம் அதிகரிக்கப் போகிறது. ஆனால், இதைச் சமாளிக்க என்னசெய்வது என்பது குறித்து மோடிக்கோ அல்லது கேரள முதல்வருக்கோ எந்த தெளிவும் இல்லை. எங்களின் முதல் நடவடிக்கை கேரள மக்களை பாதுகாப்பதாகவே இருக்கும்.

நாங்கள் கேரள பெண்களையும் அவர்களின் எதிர்காலத்தையும் பாதுகாக்கப் போகிறோம். ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சிக்கு வரும் நாளில் இருந்து கேரளாவில் பெண்களுக்கான பேருந்து பயணம் இலவசமாக இருக்கும்.

கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதம்தோறும் தனிப்பட்ட செலவுகளுக்காக ரூ.1,000 வழங்கப்படும். மூத்த குடிமக்களுக்கு ரூ.3,000 ஓய்வூதியமாக வழங்கப்படும்.

தொழில்தொடங்கவோ அல்லது தொழில்முனைவோராகமாறவோவிரும்பும் இளைஞர்களுக்கு ரூ.5 லட்சம் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும். உம்மன் சாண்டி மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்என்றபுதியதிட்டத்தை நாங்கள் தொடங்க இருக்கிறோம். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்துக்குமான மருத்துவக்காப்பீடு ரூ.25 லட்சமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் 68 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு

சென்னை:

தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு 12 மணி முதல் 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ்செயல்பட்டு வருகிற சுங்கச்சாவடிகளில் தமிழ்நாட்டில் மட்டும் 77 சுங்கச்சாவடிகள் உள்ளன. சுங்கக் கட்டணங்கள் ஒவ்வொரு ஆண்டும் மறுபரிசீலனை செய்யப்பட்டு



உயர்த்தப்படுவது வழக்கமாக உள்ளது. பொதுவாக 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை கட்டண உயர்வு அமல்படுத்தப்படுகிறது. சில இடங்களில் போக்குவரத்து அளவு, சாலை பராமரிப்பு செலவு, பணவீக்கம் உள்ளிட்ட காரணிகளை கருத்தில் கொண்டு 15 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்படும். மேலும்,தேசியநெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டண உயர்வு காலமும் மாறுபடுகிறது.

1992ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்படுகிறது. அதேபோல் 2008ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் மாதத்தில் கட்டண உயர்வு நடைமுறைக்கு வருகிறது. அதன்படி, தமிழகத்தில் நள்ளிரவு 12 மணி முதல் மொரட்டாண்டி, பல்லிக்கொண்டா, பெடகல்லுப்பள்ளி (வாணியம்பாடி), கானியூர், கிருஷ்ணகிரி, பரனூர்,ஆத்தூர் (திண்டிவனம்), மாதூர், நல்லூர், சூரப்பட்டு, வானகரம், ஸ்ரீபெரும்புதூர் (பென்னலூர்), சென்னைசமுத்திரம், எஸ்.வி.புரம், பட்டரைப்பெரும்புதூர், கல்லக்குடி, மணகத்தி, குருங்குடி (வீராணநல்லூர்),நாங்கிலிகொண்டான், காரியமங்கலம், நாகம்பட்டி, கோத்தட்டை,கரகத்தஹள்ளி, கங்காரம்பாளையம், செலியமேடு, கீழ்குப்பம், பொன்னாலகரம்,வள்ளம்,ஏனம்காரியந்தல், தென்னமாதேவி, கதவாணி, வேலம்பட்டி, மதுக்கரை, எச். புதுப்பட்டி, பொங்கலூர், வலவந்தாங்கோட்டை, கப்பலூர், எட்டூர்வட்டம், சாலைப்புதூர், நாங்குநேரி, பூதகுடி (விராலிமலை), சிட்டம்பட்டி (மேலூர்), லெச்சுமணப்பட்டி, லெம்பலகுடி, கோடிக்கோட்டை, வெண்ணாத்தூர், பழைய கந்தர்வக்கோட்டை, செண்பகம்பேட்டை,திருப்பாச்சேதி வடக்கு, போகலூர், வாகைக்குளம், திருப்பதிசாரம், உப்பார்பட்டி, சத்திரப்பட்டி, புதூர், கோவில்வேணி, வெம்புக்குடி, மணம்பாடி, புதூர்பாண்டியபுரம், எலியார்பதி, வலவந்தாங்கோட்டை ஆகிய 60 சுங்கச்சாவடிகள் சுங்கக் கட்டணம் உயர்வு அமலுக்கு வந்தது.

இந்த 60 சுங்கச்சாவடிகளிலும் 5% முதல் 7% அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கார், ஜீப், வேன் போன்ற லேசான வாகனங்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தைவிட ரூ.10 முதல் ரூ.40 வரையும், லாரி, பேருந்து போன்ற கனரக வாகனங்களுக்கு ரூ.50 முதல் ரூ.200 வரை கூடுதல் கட்டணம் விதிக்கப்பட வாய்ப்புள்ளது. மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.300 முதல் ரூ.350 வரையும், வருடாந்திர பாஸ் கட்டணம் ரூ.3,000லிருந்து ரூ.3,075 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடிகளில் 2021-26 வரை ரூ.18,865.14 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 2021-22ம் ஆண்டில் ரூ.2,649.35 கோடி, 2022-23ம்ஆண்டில்ரூ.3,758.23 கோடி,2023-24ம் ஆண்டில் ரூ.4,157.96 கோடி, 2024-25ம் ஆண்டில் ரூ.4,300 கோடி, 2025-26ம் ஆண்டில் பிப்ரவரி வரை ரூ.4,000 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

இதில்அதிகபட்சமாக கிருஷ்ணகிரி – தோப்பூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடியில் ரூ.275.13 கோடியும், குறைந்தபட்சமாகமீன்சுருட்டி – சிதம்பரம் பிரிவில் உள்ள குருங்குடி சுங்கச்சாவடியில் ரூ.2.55 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**வரி விளம்பரங்கள்**

தினத்தளம்
DHINATH DHALAM
மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்
தொடர்புக்கு : ☎ +919444082959

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்
01.04.2026

# சுண்ணாம்பட்டி கிராமத்தில் ஸ்ரீ விநாயகர் மற்றும் ஸ்ரீ மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் விழா





கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த கொண்டிரெட்டிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சுண்ணாம்பட்டி கிராமத்தில் ஸ்ரீ விநாயகர் மற்றும் ஶ்ரீ மாரியம்மன் ஆலயம் கிராமத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளது சிறியதாக இருந்த சக்திமிக்க இத்திருக்கோவிலை அக்கிராம மக்கள் கோவிலை புதிதாக புனரமைத்தனர். கட்டுமான ப் ப ணி க ள் முடிவடைந்த நிலையில் கோவிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக இன்று நடை பெற்றது. இதில் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, மற்றும் திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து சுமார் 2,000த்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கும்பாபிஷேகத்தை காண வந்திருந்தனர். முன்னதாக கணபதி பூஜையுடன் யாகசாலை பூஜைகள் தொடங்கியது இரண்டு கால யாகசாலை பூஜையில் விக்னேஸ்வர பூஜை, கோ பூஜை,நவகிரகஹோமம், வாஸ்து சாந்தி மற்றும் பல்வேறு யாகஹோமங்கள் நடைபெற்று பூர்ணாஹூதி அளிக்கப்பட்டன. பின்னர் மங்கள இசை வாத்தியங்களுடன் கருடம் புறப்பாடு நடைபெற்று, மூலவர் விமான கலசங்களுக்கு சிவாச்சாரியார்கள் தலைமையில் வேத மந்திரங்கள் முழங்க கலசத்தில் உள்ள புனித நீரால் ஊற்றப்பட்டது. தொடர்ந்து கலசத்திற்கு தீபாரதனை காண்பிக்கப்பட்டவுடன், பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. இதில் கொண்டிரெட்டிப்பட்டி, கொட்டாவூர் ஆகிய கிராமங்களைசேர்ந்தகோம்பு குலதெய்வ பங்காளிகள் மற்றும் 2000 க்கும் மேற்பட்ட பக்தர்களும் இந்த கும்பாபிஷேக விழாவை கண்டு களித்தனர், மேலும் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் கோவில் நிர்வாகத்தின் சார்பில் அன்னதானம் அருட்பிரசாதம் வழங்கப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. க .ஸ்டாலின் அவர்கள்வருகின்றநாளை(2/4/2026)தேதியன்றுகாலை9.00மணியளவில்மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணியின்ஒருங்கிணைந்தஈரோடுசட்டமன்ற8தொகுதிவேட்பாளர்களை அறிமுகம் செய்து தேர்தல் பரப்புரை மேற்கொள்ள உள்ள திடலினை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி அங்கு நடைபெற்று பணிகளை கட்சி நிர்வாகிகளுடன் சென்று பார்வையிட்டார்.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட ஈசூர் பகுதியில் உள்ள பொன்னியம்மன் ஆலயத்தில் சாமி தரிசனம் செய்து செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம் தேர்தல் பரப்புரையை துவக்கி வைத்தார் அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்களுக்கு சிறந்த வாகனத்தில் சென்றுஈசூர்,பூதூர்,விழுதமங்கலம்,கிணார்,கீழ்வலம்இப்பகுதிகளில்திறந்தவாகனத்தில் சென்று மேளதாளங்களுடன் பொதுமக்கள் ஆரத்தி எடுத்து மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர் இந்த நிகழ்ச்சியினை மதுராந்தகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வையாவூர் விஜி குமரன் ஏற்பாட்டில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமான கலந்துகொண்டு இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அருகே உள்ள அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் கோவில் குண்டம் திருவிழா நேற்று அதிகாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், குண்டம் இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினார். பின்னர் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிய அவரோடு, பா.ஜ.க நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல்: மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில், சட்டமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

இதனை முன்னிட்டு, தேர்தல் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சியரும், மாவட்ட தேர்தல் அலுவலருமான தினேஷ்குமார் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை பணிகள்

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) தங்கதுரை அவர்களுடன் இணைந்து வட்டாட்சியர் அ லுவலக வளாகத்தை ஆய்வு செய்த ஆட்சியர், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். ஆய்வின் போது அவர் அதிகாரிகளுக்கு வழங்கிய முக்கிய அறிவுறுத்தல்கள்:

கட்டுப்பாடுகள்:வேட்பு ம னு தாக்கல் செய்ய வரும்போது, தேர்தல் ஆ ணைய ம் நி ர்ணயித்துள்ள எண்ணிக்கையிலான நபர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்க வேண்டும்.

சரிபார்ப்பு: வேட்பாளர்கள் சமர்ப்பிக்கும் ப டிவங்களில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை கவனமாக சரிபார்க்க வேண்டும்.

ஒழுங்குமுறை: மனு தாக்கல் நடைபெறும் பகுதிகளில் எவ்வித கூட்ட நெரிசலும் இன்றி அமைதியான முறையில் பணிகளைமேற்கொள்ள வேண்டும்.

பங்கேற்ற அலுவலர்கள்

இந்த ஆய்வின் போது ஊத்தங்கரை சட்டமன்ற தேர்தல் அலுவலர் சிவக்குமார், உதவி தேர்தல் அலுவலர் ராஜலட்சு மி, துணை தேர்தல் வட்டாட்சியர்கள், வட்டாட்சியர் அலுவலக பணியாளர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்குவதை முன்னிட்டு ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் பலத்த போலீஸ் பா துகாப்பு போடப்பட்டுள்ளது.

# மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஏர் கலப்பையுடன் வந்து வேட்பு மனு தாக்கல் செய்தார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ( தனி) சட்டமன்ற தொகுதியின் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் கோ. ஜானகிராமன், இன்று தனது கட்சியுடன் வந்து வேட்பு மனு தாக்கல் செய்தார்.

தமிழக சட்டசபைக்கு பொது தேர்தல் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனு முன் தாக்கல் மார்ச் 30-தேதி இன்று தொடங்கியது.

மதுராந்தகம் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் ஜானகிராமன், மதுராந்தகம் புறவழிச் சாலையில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து ஏர்கலப்பை சுமந்தவாறு தனது கட்சியினருடன் ஊர்வலமாக வந்தார். மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் நரேந்திரன் வேட்பு மனு செய்தார்.அவருக்கு மாற்றாக தாமரைக்கனி தாக்கல் செய்தார்.

## தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள

# 24 மணி நேர தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளை கலெக்டர் க. இளம்பகவத் ஆய்வு செய்தார்



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்-2026 வரும் ஏப்ரல் 23-ஆம் தேதி நடைபெற உள்ளது.தேர்தல் அமைதியாகவும் வெளிப்படையாகவும் நடப்பதை உறுதி செய்யும் வகையில் தேர்தல் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட நிர்வாகம் தீவிரப்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 மணி நேர தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகளை, மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான க. இளம்பகவத் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், புகார்களைப் பெறுதல் மற்றும் வீடியோ கண்காணிப்புப் பணிகளின் த ற் போ தை ய நிலையை ஆட்சியர் கேட்டறிந்தார்.கட்டுப்பாட்டு அறையில் உள்ள கணினித் திரைகள், வரைபடங்கள் மற்றும் தொலைபேசி வாயிலாகப் பெறப்படும் புகார்கள் பதிவு செய்யப்படும் முறையை அவர் ஆய்வு செய்தார். பொதுமக்களிடமிருந்து வரும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும், தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களைக் கண்டிப்புடன் பின்பற்றவும் அங்கிருந்த அலுவலர்களுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது, தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் பொறுப்பு அலுவலர்கள் மற்றும் அரசுப்பணியாளர்கள் உடனிருந்தனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதி 2026 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் அவர்கள் மானாமதுரையில் உள்ள அண்ணா சிலை, தேவர் சிலை மற்றும் காந்தி சிலைக்கு மரியாதை நிமித்தமாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திமுக நகர கழக செயலாளர் பொன்னுசாமி, நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, காங்கிரஸ் நகர் தலைவர் புருஷோத்தமன், திமுக ஒன்றிய செயலாளர் ராஜாமணி, அண்ணாதுரை, முத்துசாமி, தேமுதிக மேற்கு ஒன்றிய செயலாளர்தர்மாராமு,மதச்சார்பற்றமுற்போக்குகூட்டணி கட்சிகளான காங்கிரஸ், விசிக, தேமுதிக, சிபிஎம், சிபிஐ, மநீம உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள்மற்றும்தொண்டர்கள்கலந்துகொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் ஆல் தி சில்ட்ரன் தொண்டு நிறுவனத்தின் மூலமாக தொங்கும் நூலகம் அமைக்கப்பட்டது. தலைமையாசிரியர் லெ . சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் மற்றும் ஜேம்ஸ் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# விருத்தாச்சலம் பழமலைநாதர் கோயிலில் முதியவர்கள், ஏழைகளுக்குச் சிறப்பு அன்னதானம் 4 மாதங்களாகத் தொடரும் நற்பணி!

விருத்தாச்சலம்:கடலூர்மாவட்டம்,விருத்தாச்சலம் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது மிகவும் புகழ்பெற்ற அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில். தேவாரப் பாடல் பெற்ற நடுநாட்டுத் தலங்களில்



ஒன்றான இத்தலத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் மூலவரான ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் மற்றும் அம்பாளை தரிசிப்பதற்காக உள்ளூர் மட்டுமின்றி சுற்றியுள்ள பல்வேறு கிராமங்கள் மற்றும் மாவட்டங்களில் இருந்தும் நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சிவாலயத்திற்கு வரும் பக்தர்களின் பசிப்பிணியைப் போக்கும் வகையில், சமூக ஆர்வலர்கள் மற்றும் நன்கொடையாளர்களால் பல்வேறு நற்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, ஓம் சக்தி ரியல் எஸ்டேட், நெல் அறுவடை இயந்திரம் மற்றும் எர்த் மூவர்ஸ் ஆகிய நிறுவனங்களின் நிறுவனரான இளையராஜா தலைமையில் கடந்த நான்கு மாதங்களாகச் சிறப்பு அன்னதானத் திட்டம் மிகவும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வாரந்தோறும் செவ்வாய் மற்றும் சனிக்கிழமை ஆகிய இரண்டு நாள்களில் மதிய வேளையில் நடைபெறும் இந்த அன்னதான நிகழ்வில், ஒவ்வொரு முறையும் நூற்றுக்கும் மேற்பட்டோருக்குச் சிறப்பான முறையில் உணவு பரிமாறப்பட்டு வருகிறது.

வெளியூர்களில் இருந்து சுவாமி தரிசனம் செய்ய வரும் முதியவர்கள், குழந்தைகள், ஏழைகள் மற்றும் பொதுமக்களுக்கு இந்த மதிய நேர அன்னதானம் பெரும் உதவியாக அமைந்துள்ளது. எவ்வித தடையுமின்றிகடந்தநான்குமாதங்களாகத்தொடர்ந்து நடைபெற்று வரும் இந்தச் சேவையைத் திருக்கோயிலுக்கு வரும் ஏராளமான பக்தர்கள் பயன்படுத்திப் பயனடைந்து வருவதுடன், இத்தகைய சிறப்பான அறப்பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் ஒருங்கிணைப்பாளர் மற்றும் குழுவினரையும் நெஞ்சாரப் பாராட்டிச் செல்கின்றனர்.





தமிழக சட்டப்பேரவை தேர்தல் வருகிற ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெற உள்ளது. ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் அமைச்சர் சு.முத்துசாமி 30.3.2026 அன்று மாலை ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மைலாடி செல்லாண்டியம்மன் கோவில்,மைலாடி காலனி, நடுப்பாளையம், ஞானிபாளையம் தண்ணீர்பந்தல், கடலைகாட்டுப்புதூர், வேலம்பாளையம், வெங்கிட்டியம்பாளையம், உலகபுரம், மோளகவுண்டம்பாளையம்,முதலியக்கவுண்டன் வலசு,உருமாண்டம்பாளையம் ,கும்மாகாளிபாளையம்,குமரன் நகர்,கொம்மக்கோவில், சென்னிமலைபாளையம் புதூர்,சென்னிமலை பாளையம்,JJ நகர் ஆகிய இடங்களில் உள்ள பொதுமக்களை அவர் நடந்தே சென்று நேரடியாக சந்தித்து உதயசூரியன் சின்னத்துக்கு வாக்குகளை சேகரித்தார்.இந்த நிகழ்வில் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## அச்சிறுப்பாக்கம் அருகே
# அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் அறிமுக கூட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் நகரம், அச்சிறுப்பாக்கம் ஒருங்கிணைந்த ஒன்றியத்திற்கு உட்பட்ட ராமாபுரம், கடமலைப்புத்தூர், பகுதிகளில் அதிமுக வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்கள் அறிமுக கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்தை செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம் கலந்து கொண்டு வேட்பாளரை அறிமுகம் செய்து ஆலோசனை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டினை மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் முதுகரை கார்த்திகேயன்,மதுராந்தகம் நகர் கழக செயலாளர் பூக்கடை கே சி சரவணன், அச்சிறுப்பாக்கம் ஒன்றிய கழக செயலாளர்கள் பெரும்பாக்கம் விவேகானந்தன், டாக்டர் ரங்கராஜன்,பேரூர் கழக செயலாளர் முருகதாஸ் இவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் அப்போது

அதிமுக வேட்பாளர் பேசுகையில் இந்த திமுக ஆட்சியில் கடந்தாண்டு சட்டமன்றத் தேர்தலில் தேர்தல் அறிக்கையை ஒன்றுகூட நிறைவேற்ற முடியவில்லை தற்போது அறிவித்துள்ள தேர்தல் அறிக்கை மக்களுக்கு பயனில்லாத அறிக்கையை அறிவித்துள்ள திமுக அரசை அகற்றி அதிமுக கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் அவர்களை ஆட்சி கட்டலில் அமைக்க அயராத பாடுபட வேண்டும் என பேசினார் இந்த நிகழ்ச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக கிளை மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஓமலூர் தொகுதி அதிமுக வேட்பாளர் நிர்வாகிகளை சந்தித்து ஆதரவு திரட்டினார்



சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள R.மணி எம்.எல்.ஏ., தேர்தலை முன்னிட்டு தொளசம்பட்டி, அமரகுந்தி உள்ளிட்ட சுற்றுவட்டார ஊராட்சிப் பகுதிகளில் அதிமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளைச் சந்தித்து ஆதரவு திரட்டினார். இந்த சந்திப்பின் போது, வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய பிரச்சார திட்டங்கள், வாக்காளர் சந்திப்பு, வீடு தோறும் பிரச்சாரம், இளைஞர் மற்றும் பெண்கள் அணியின் பங்கு உள்ளிட்ட பல்வேறு தேர்தல் வியூகங்கள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது. தேர்தலில் மிகுந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்என R.மணி கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் அதிமுக கொள்கை பரப்புதுணைசெயலாளர் தமிழரசு,தாரமங்கலம் ஒன்றிய செயலாளர் மணிமுத்து, எஸ்.எஸ்.கே.ஆர். ராஜேந்திரன், மோகன்ராஜ்,வெள்ளிங்கிரி, ரத்தனம்,சொக்கலிங்கம் ராஜேந்திரன்,செந்தில், இருசாயி, சுகுமார், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர். இந்த நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனை கூட்டம் ஓமலூர் தொகுதியில் தேர்தல் பணிகளை வேகப்படுத்தும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.



மதுரையில் கிழக்கு தொகுதிக்குட்பட்ட சக்கிமங்கலம் கல்மேடு ஆண்டார்கொட்டாரம் கார்சேரி இளமனூர் சக்குடி உட்பட்ட பகுதிகளில் வேட்பாளர் அறிமுகப்படுத்தும் நிகழ்வு கார்சேரி கணேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிழக்கு தொகுதி வேட்பாளர் வழக்கறிஞர் மாங்குளம் மகேந்திரன் அவர்கள் வேட்பாளராக நிர்வாகிகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்த இந்நிகழ்வில் கார்த்திகேயன், பெரிய செல்வம் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக, நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் அப்போது பத்திரிக்கையாளர் சந்திப்பில் வேட்பாளர் மகேந்திரன் கூறியதாவது நான் நேர்மையாக வாழ்ந்து வருகிறேன் இதுவரை எந்த ஒரு கையூட்டும் பெற்றதில்லை யாருக்கும் எந்த ஒரு சிறு தீங்கும் செய்ததில்லை ஆளும் திமுக அரசு மக்களுக்கு எந்த ஒரு நல்ல திட்டத்தையும் இதுவரை செயல்படுத்தவில்லை தேர்தல் வாக்குறுதிகள் மக்கள் திருப்தி அடையும்படி எதுவும் செய்யவில்லை நான் மக்களுக்காக உழைக்க 100 சதவீதம் நேர்மையாக உழைக்க தயாராக இருக்கிறேன் எனக்கு கழக நிர்வாகிகள் அனைவரும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு தெரிவித்தார்.

# தேனியில் பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது

தேனி மாவட்டம் தேனி பாரதிய ஜனதா கட்சி தேனி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் நிகழ்ச்சியில் கழக பொறுப்பாளர் டாக்டர்-கதிர் கதிர்காமு,அம்மா




அலுவலகத்தில் பாரதிய ஜனதா பொறுப்பாளர்களிடம் பாரதிய ஜனதா மாவட்ட கட்சி தலைவர் ராஜபாண்டியன் தலைமையில் பொறுப்பாளரிடம் அம்மா மக்கள் முன்னேற்ற கழக கூட்டணி வேட்பாளர் டாக்டர் கதிர்காமு மைபெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு வருகை சட்டமன்றத்தேர்தலில்கூட்டணி வேட்பாளராக நிற்கும் கதிர்காமுக்கு குக்கர் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி கூட்டத்தி ல்பொறுப்பாளியிடம் மாவட்ட தலைவர் ராஜபாண்டி அறிமுகம் செய்து எடுத்துரைத்தார் இந்த மக்கள் முன்னேற்ற கழக மாவட்ட கழக செயலாளர் காசிமாயன்,மற்றும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகநிர்வாகிகள்,அதிமுக பொறுப்பாளர்கள், பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள்,உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்,

# கோவை ரோட்டரி கிளப் ஆப் பெரியநாயக்கன்பாளையம் நார்த் எனும் க்ளப் தொடக்கப்பட்டது

### புதிய கிளப்பின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்று ஆனைகட்டி பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினர்

ரோட்டரி கிளப் ஆப் பெரியநாயக்கன்பாளையம் நார்த், ஆர். ஐ மாவட்டம் 3203 சார்டர் நார்த் கிளப்பில் இணைந்த உறுப்பினர்களுக்கு பதவியேற்பு சத்தியப்பிரமாணத்தை அசிஸ்டண்ட் கவர்னர் ரோட்டேரியன் விஜய் பிரபு நடத்தி வைத்தார். அதையடுத்து உறுப்பினர்கள் அனைவருக்கும் ரோட்டரி கிளப் பேட்ஜ் அணிவிக்கப்பட்டு உறுப்பினர் சான்றிதழ் வழங்கப்பட்டது.




இன்ஸ்டாலேஷன் விழா கோவை பெரியநாயக்கன்பாளையத்தைஅடுத்தஜோதிபுரம் பகுதியில் உள்ள கே வி என் மஹாலில் நடைபெற்றது.

ரோட்டரி கிளப் ஆப் காரமடை ஆதரவுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கு ஏற்றி வைத்தும், மணி அடித்தும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. ஸ்பான்சர் கிளப் ரோட்டரி கிளப் ஆப் காரமடை தலைவர் ரோட்டேரியன் எம். பி.ஹெச்.எப் குமணன் நடராஜன் வரவேற்புரை வழங்கினார்.

தொடர்ந்து புதிதாக தொடங்கப்பட்டரோட்டரி கிளப் ஆப் பெரியநாயக்கன்பாளையம்

இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக புதிய நிர்வாகிகள் பதவியேற்றனர். இதில் ரோட்டரி கிளப் ஆப் பெரியநாயக்கன்பாளையம் நார்த் சார்ட்டர் தலைவராக ரோட்டேரியன் முகமது ஹனீஃப், சார்ட்டர் செயலாளராக ரோட்டேரியன் ராஜசேகர், சார்ட்டர் பொருளாளராக ரோட்டேரியன் ரவிகுமார் ஆகியோர் பதவியேற்றுக் கொண்டு, ஆனைகட்டியில் செயல்பட்டு வரும் மலைவாழ் மக்கள் உண்டு உறைவிடப் பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்களை புதியதாக தொடங்கப்பட்ட ரோட்டரி கிளப் ஆப் பெரியநாயக்கன்பாளையம் நார்த் நிர்வாகிகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், 3203 மாவட்ட ஆளுநர் ரோட்டேரியன் தனசேகர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரோட்டேரியன் லோகநாதன், திருப்பூர் நியூ கிளப் புரமோஷன் சேர் ரோட்டேரியன் வேலுசாமி மற்றும் மாவட்ட உறுப்பினர் சேர்க்கை சேர் ரோட்டேரியன் சுரேந்திரன், நியூ கிளப் ஆலோசகர் ரோட்டேரியன் சிவசதீஷ் குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

# அரசு விவசாயக் கல்லூரி இணை பேராசிரியருக்கு சிறந்த கல்வியாளர் விருது




செங்கல்பட்டு மாவட்டம் ஆல் இந்தியா பிரஸ் அண்ட் மீடியா பீப்பிள்ஸ் அசோசியேஷன் எனப்படும் அகில இந்திய பத்திரிகை மற்றும் ஊடக மக்கள் சங்கம் சார்பில் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் புதுச்சேரி யூனியன் பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் பலருக்கு பதக்கங்கள் அணிவித்து, விருது சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

சங்கத்தின் புதுச்சேரி மாநில பொதுச் செயலாளர் அஷ்ரப்தீன் தலைமையில் விழா நடைபெற்றது. இவ்விழாவில் தேசிய பொதுச் செயலாளர், வழக்குரைஞர் முனைவர் டி.ஜி.மனோகர் அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியினை வழி நடித்தினார். தேசிய துணைத்தலைவர்கள் தந்தை பிரியன் அப்துல் ரகுமான் மற்றும் தேசிய துணைச் செயலாளர் முனைவர் பண்டரிநாதன் அண்ணாதுரை ஆகியோர் நிகழ்ச்சியில் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளர்களாக சட்ட உரிமைகள் கழகம் இன்டர்நேஷனல் அமைப்பின் சர்வதேச பொதுச் செயலாளர், வழக்குரைஞர் முனைவர் சுரேஷ்குமார், பீப்பிள் ஃபோரம் ஆஃப் இந்தியா தமிழ்நாடு மாநில செயலாளர், வழக்குரைஞர் முனைவர் வி.எஸ்.முகமது முபாரக் (சலீம்) மற்றும் பணி நிறைவு பெற்ற நீதிபதி டாக்டர் ஜே. ஹரிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினர்.

மேலும், நிகழ்ச்சியில் வழக்குரைஞர் ஶ்ரீமன் நாராயணா, தேசிய துணைச் செயலாளர் ஆந்திரப் பிரதேசம் வழக்குரைஞர் பி.எம்.சுந்தரமூர்த்தி, தேசிய சட்ட ஆலோசகர் கர்நாடகா வழக்குரைஞர் ராதாசவுத்ரி, மாநில துணைச் செயலாளர், வழக்குரைஞர் சப்னம்கௌசர், மத்தியப் பிரதேச மாநில செயலாளர், வழக்குரைஞர் வெங்கட்ரமணன், தமிழ்நாடு மாநில தலைவர், முனைவர் ஆர்.பி. கமல்ராஜ், தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் சிவ.மணிகண்டன், மாநில செயலாளர் அகமது ரியாஸ், மாநில துணைத்தலைவர் இளையராஜா, மாநில துணைச் செயலாளர் டி.பி.மார்க்ஸ் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை புதுச்சேரி மாநில துணைத்தலைவர் ராஜாராம்குமார், மாநில ஒருங்கிணைப்பாளர் அலெக்ஸ்பாண்டியன், புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு மக்கள் தொடர்பு அலுவலர் ஹரிதாஸ், புதுச்சேரி மாநில துணைத்தலைவர் வெங்கடேச பெருமாள், மாநில துணைச் செயலாளர் சக்திவேல் ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டிருந்தனர். இவ்விழாவில், புதுச்சேரி அரசின் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் வேளாண் விரிவியல் பிரிவில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் முனைவர் ஆனந்த்குமார் மாணவர்-மாணவிகளுக்கு களப்பணிகளில் நேரடி பயிற்சிகளை வழங்குவதுடன் விவசாயிகளுடன் இணைந்து செய்முறை அடிப்படையிலான அனுபவ கற்றலை தொடர்ந்து அயராது முன்னெடுத்து வருவதற்காக சிறந்த கல்வியாளர் விருது வழங்கப்பட்டது.

# சேலம்:துர்நாற்றம் வீசும் பவளத்தானுர் ஏரி; நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை



சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி பேருந்து நிலையம் மிக அருகில் பவளத்தானுர்ஏரி உள்ளது.இந்தஏரி ஆனது தாரமங்கலம் மற்றும் குறுக்குப்பட்டி கிராமத்திற்கு உட்பட்டது ஆகும்.மிக முக்கிய நீர் ஆதாரமாக இருந்து வந்த இந்த ஏரி தற்பொழுது ஆகாய தாமரைகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு ஏராளமான குப்பை கழிவுகள் இறைச்சி கழிவுகள் செப்டிக் டேங்க் கழிவுகள் மருத்துவமனைகளில் இருந்து வீசப்படும் கழிவுகள் ஆகியவை இந்த ஏரிகளில் தேங்கி மிகுந்த துர்நாற்றம் வீசுவதால் இயற்க்கை சூழ்நிலைகள் பாதிக்கிறது. இந்த வழியாக சென்று வரும் 'பொதுமக்கள் துர்நாற்றம் தாங்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டு சென்று வருகிறார்கள்.நோய் தொற்றுக்களை தடுக்க கழிவுகளை முறையாக அகற்றி ஏரியை சுகாதாரமாக பராமரிக்கவும் இயற்க்கை வளங்களை பாதுகாக்கவும் பொதுநலன் கருதி சரிசெய்துதர வேண்டும் என்பது சமூக ஆர்வலர் S. சசிகுமார் மற்றும் அப்பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது.



ஈரோடு மாவட்டம் சென்னிமலையில் உள்ள அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் நேற்று செவ்வாய்க்கிழமை என்பதால் அதிகாலை 4 மணிக்கே பக்தர்கள் கூட்டம் குவிந்தது. சிவாச்சாரியார்கள்மந்திரம்ஓத,கோமாதாபூஜையுடன் நடை திறக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து முருகப்பெருமானை தரிசனம் செய்தனர்.செவ்வாய் தோறும் நடைபெறும் இந்தச் சிறப்பு வழிபாட்டில் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு பெரிய மாரியம்மன் வகையறா திருக்கோயில் குண்டம் மற்றும் தேர் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.நேற்று குண்டம் திருவிழா காலை ஈரோடுமாநகர்காரைவாய்க்கால்மாரியம்மன் கோவிலில் சிறப்பாக நடைபெற்றது. பெரிய மாரியம்மன் கோவில் திருவிழாவின் ஒரு பகுதியாக நடந்த இந்நிகழ்வில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீ மிதித்து நேர்த்திக்கடன் செலுத்தினர். பின்னர் சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்த அம்மனைத் தரிசித்து வழிபட்டனர். விழாவையொட்டி அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (30.03.2026) அன்று ஈரோடு இரயில் நிலைய சந்திப்பில் பயணிகளிடம் தேர்தல் விழிப்புணர்வு குறித்த துண்டுபிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (31.03.2026) நேற்று சத்தியமங்கலம் பேருந்து நிலைய,பேருந்தில் பயணிகளிடம் தேர்தல் விழிப்புணர்வு குறித்த துண்டுபிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



# தூத்துக்குடி முத்துநகர் கடற்கரையில் வாக்கு சேகரித்த அமைச்சர் கீதா ஜீவன்

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில்,தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், திமுக வேட்பாளரும், அமைச்சருமான கீதா ஜீவன், அதிகாலையிலேயே முத்துநகர் கடற்கரையில் நடைபயிற்சி மேற்கொள்பவர்களிடம் வாக்கு சேகரித்து அசத்தினார்.

தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் திமுக வேட்பாளராகப்போட்டியிடுகிறார் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சருமான கீதா ஜீவன். பொதுவாக தேர்தல்நேரத்தில்அரசியல் கட்சியினர் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பது வழக்கம்.

இந்த நிலையில், அமைச்சர் கீதா ஜீவன் இன்று அதிகாலையிலேயே தூத்துக்குடி முத்துநகர் கடற்கரைக்குச் சென்று பிரச்சாரத்தை முன்னெடுத்தார். அங்கு நடைபயிற்சி மற்றும் உடற்பயிற்சி மேற்கொண்டிருந்த பொதுமக்களை நேரில் சந்தித்து அவர் ஆதரவு திரட்டினார். அப்போது அங்கிருந்த கல்லூரி மாணவிகள்,இல்லத்தரசிகள் மற்றும் முதியவர்கள் அமைச்சரைச் சூழ்ந்து கொண்டு உற்சாகமாகப் பேசினர்.

பல மாணவிகளும் பெண்களும் அமைச்சருடன் ஆர்வத்துடன் 'செல்பி' எடுத்துக்கொண்டதோடு, தேர்தலில் வெற்றி பெறத் தங்களது வாழ்த்துகளையும் தெரிவித்தனர். வாக்காளர்களை மிகவும் சுறுசுறுப்பான சூழலில் சந்திக்கும் இந்த உத்தி, மக்களிடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்த உதவும் ஒரு சிறந்த பிரச்சார முறையாகப் பார்க்கப்படுகிறது. வாக்கு சேகரிப்பு நிகழ்வின் போது காங்கிரஸ் மாநிலத் துணைத் தலைவர் ஏ.பி.சி.வி. சண்முகம், முன்னாள் மாநகர் மாவட்டத் தலைவர் முரளிதரன், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர் நிர்மல்ராஜ், மரிய ஆன்ஸ், கவுன்சிலர் எடின்டா, காங்கிரஸ் வட்டத்தலைவர்மோகன், பெருமாள் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் செந்தில்குமார் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் என்.நல்லசிவம், நம்பியூர், மலையப்பாளையம் மற்றும் எம்மாம்பூண்டி பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்குத் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். கட்சியின் மூத்த முன்னோடிகளைச் சந்தித்து வாழ்த்துப் பெற்ற அவரோடு, ஒன்றிய செயலாளர் மெடிக்கல் செந்தில்குமார், பேரூர் செயலாளர் ஆனந்தகுமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு தேர்தல் பணிகளைத் துரிதப்படுத்தினர்.



ஈரோடு மாவட்டம் பவானி சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் கே.சி.கருப்பண்ணன் போட்டியிடுகிறார். இந்த நிலையில் பவானி நகர் பகுதியில் கூட்டணிக் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகளை வேட்பாளர் கருப்பண்ணன் சந்தித்து ஆதரவு கோரினார் .அப்போது பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகிகள் அவரது கையில் மாங்காய் கொடுத்து அவருக்கு வரவேற்பு அளித்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (31.03.2026) நேற்று சத்தியமங்கலம் பேருந்து நிலையத்தில் தேர்தல் விழிப்புணர்வு குறித்த துண்டுபிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மற்றும் மகளிர் சுய உதவி குழு உடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். உடன் ஆணையாளர் வெங்கடேஸ்வரன். திட்ட இயக்குநர்மாவட்டஊரகவளர்ச்சிமுகமைபிரியா,வட்டாரவளர்ச்சிராதாமணி,நகரமைப்பு அலுவலர் ராஜ்குமார், நகரமைப்பு ஆய்வாளர் வரதராஜன், சுகாதார ஆய்வாளர் ஆரோக்கியசாமி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டார்கள்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்துள்ள அடர்ந்த வனப்பகுதியில் பிரசித்தி பெற்றஅருள்மிகுஶ்ரீபண்ணாரிமாரியம்மன்கோயில்அமைந்துள்ளது.இந்தகோயிலுக்கு தமிழ்நாடு மட்டுமின்றி, வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகை புரிந்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தி வருகின்றனர். இந்நிலையில், திருவிழாவின் முக்கியநிகழ்வானபக்தர்கள்குண்டம்இறங்கும்திருவிழாநேற்றுசிறப்பாகநடைபெற்றது. இவ்விழாவில் லட்சக்கணக்கான பக்தர்கள் குண்டம் இறங்கி அம்மன் அருள் பெற்றனர்.

# எல்பிஜி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசாங்கத்தால் வணிக எல்பிஜி ஒதுக்கீடு ஆரம்பத்தில் 20% ஆகக் குறைக்கப்பட்டது

## கலெக்டர் க ந்தசாமி தகவல்

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு-



எல்பிஜி நெருக்கடியைக்கருத்தில்கொண்டு, இந்திய அரசாங்கத்தால் வணிக எல்பிஜி ஒதுக்கீடு ஆரம்பத்தில் 20% ஆகக் குறைக்கப்பட்டது. இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, தற்போது வணிக வாடிக்கையாளர்கள் நெருக்கடிக்கு முந்தைய அளவில் 70% வரை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர் இருப்பினும், சில நிபந்தனைகளைவாடிக்கையாளர்கள் பூர்த்தி செய்தால் மட்டுமே முழு 70% ஒதுக்கிட்டின் பலனைப் பெற முடியும். அனைத்து வணிக தொழில்துறை எல்பிஜி நுகர்வோரும், கூடுதல் ஒதுக்கீட்டிலிருந்து எல்பிஜியைப் பெறுவதற்குத் தகுதி பெறுவதற்கு சம்பந்தப்பட்ட எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களில் (IOCL, HPCL, BPCL) பதிவு செய்ய வேண்டும். மேலும். அத்தகைய எல்பிஜி நுகர்வோர். குழாய்வழி இயற்கை எரிவாயு (Pipeline Natural Gas) இணைப்புகளுக்குப் பொருந்தும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள நகர எரிவாயு விநியோக (City Gas Distribution) நிறுவனங்களில் பதிவு செய்து.PNG (Pipeline Natural Gas) பெறுவதற்கான தங்கள் தயார்நிலையை வெளிப்படுத்த வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் விருப்பமுள்ள வணிக/ தொழில்துறை எல்பிஜி நுகர்வோர்.PNG(Pipeline Natural Gas) இணைப்புகளைப் பெறுவதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள CGD (City Gas Distribution) நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்:

ஈரோடு மாவட்டம் CGD நிறுவனம் கட்டணமில்லா தொடர்பு எண் BPCL 1800-22-4344 வழங்கப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:

K.S.R. பிரசாத் நிர்வாக இயக்குனர்,Torrent Gas Chennai Pvt Ltd.

CGD Network மாநிலஅளவிலான ஒருங்கிணைப்பாளர் ,தொடர்பு-எண்: +91 6357469742

எனவே. அனைத்து வணிக வாடிக்கையாளர்களும் மேற்கண்ட நிபந்தனைகளுக்கு இணங்கி, 70% ஒதுக்கீட்டின் பலனைப் பெறுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தெரிவித்துள்ளார்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளராக இரா.மனோகரன் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதிமுகவினர் தேர்தல் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாநகர் தீயணைப்பு நிலையம் அருகேஅமையவுள்ளதேர்தல்பணிமனைக்கானபணிகளைமாநகர்மாவட்டச்செயலாளர் கே.வி.ராமலிங்கம் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

# தென்சென்னை கிழக்கு மாவட்ட மதிமுக நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா

சென்னை:

தேர்தலில் போட்டியிட சீட் கிடைக்காததால் மதிமுக தென் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் கழக.குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமாசெய்துள்ளனர்.

திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டு வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ மீது அதிருப்தியை வெளிப்படுத்தி மதிமுகதென்சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர்கழக.குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கூண்டோடு ராஜினாமா செய்துள்ளனர்.




வைகோவுடன் பேரணி, நடை பயணம் போராட்டங்கள் என நெருக்கடி காலத்திலும் கடந்த 32 ஆண்டு காலம் அவருடன் பயணித்தேன். கழகமே குடும்பமாக இயங்கிவந்த எனக்கு உரிய அங்கீகாரம் கொடுப்பேன் என அவர் வாக்குறுதி அளித்தார்.

2021 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கொடுக்கவில்லை. அதற்கு, தவறு செய்து விட்டேன். நிச்சயம் வரும் தேர்தலில் போட்டியிட வாய்ப்புதருவேன் என அப்போது வாக்குறுதி அளித்தார்.

தற்போது நடைபெற உள்ள தேர்தலில் வாய்ப்பளிப்பதாக 4 மாதங்களுக்கு முன்பே உறுதியளித்தார். ஆனால் இந்த தேர்தலிலும் எனக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டதால், கடுமையான மன உளைச்சலுக்குஆளாகி உள்ளேன்.

என வே, நான் இது வரை கட்சியில் வகித்து வந்தஆட்சி மன்றக் குழு உறுப்பினர், மாவட்டச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை நான் மற்றும் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் ராஜினாமா செய்கிறோம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.